


மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் விருப்பத்துடன் செய்யும் போது அது வெற்றிக்கான பல வழிகளை திறந்து கொடுக்கிறது. அதுவே விருப்பமில்லாமல் செய்யப்படும் போது தோல்வியையே ஏற்படுத்துகிறது. உதாரணமாக ஒரு விவசாயிடம் பருவ காலத்தில் நீங்கள் கோதுமையா நட்டிருக்கிறீர்? என்று ஒருவர் கேட்டார். அதற்கு விவசாயி இல்லை மழை பெய்யாமல் போய்விடுமோ என பயந்து நடவில்லை என்றார்.

வேறென்ன, சோளம் நட்டீரா? அதற்கு விவசாயி இல்லை பூச்சிகள் தின்று விடும் என்று பயந்து அதையும் நடவில்லை. சரி என்னதான் நட்டீர்கள்? அதற்கு அந்த விவசாயியோ, இல்லை எதுவும் நடவில்லை. மிகவும் ஜாக்கிரதையாக இருந்து விட்டேன் என்று பதில் கூறினார். இந்த உவமைக் கேற்ப தன்னார்வத்துடன் செயல்படுதல் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கிறது.

ஒரு சிறிய கைக்குட்டை கீழே விழுந்து விட்டது. அது எனக்கு தேவைதான். ஆனால் குனிந்து எடுப்பதற்கு ஆர்வமில்லாமல் போனால் அந்த சாதாரணச் செயல் எவ்வளவு பெரிய பாரமாகிப் போகின்றது. ஒவ்வொரு செயலுக்கும் தன்னார்வம் எவ்வளவு அவசியமான

என்பதையே இந்த ஒப்பீடு நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

மிகப்பெரும் இலக்கை நோக்கி இலட்சியவாதிகளாக பயணிக்கும் நம்மிடம் ஆர்வமின்மை அறவே வந்து விடக்கூடாது எனும் அடிப்படையில் இது சார்ந்துள்ள இஸ்லாமிய வழிகாட்டல்கள் என்ன? என்பதையே இந்த ஜும்ஆவில் நாம் பகிர்ந்து கொள்ளவிருக்கிறோம்.

**தன்னார்வம் பற்றி இஸ்லாம்**

நல்லவற்றின் மீது ஆர்வம் கொள்வதை நபிமார்களின் பண்பாக திருமறை விளக்குகிறது.

إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَبًا وَرَهَبًا

நிச்சயமாக இவர்கள் (அனைவரும்) நற்பணிகளில் வேகம் காட்டுபவர்களாகவும், ஆவலோடும், அச்சத்தோடும் நம்மை அழைப்பவர்களாக இருந்தனர்.

**- அல்குர்ஆன் 21 : 90**

இந்த வசனத்திற்கு முந்திய வசனத்தில் நபி ஜகரிய்யா (அலை) அவர்கள் தொடர்பாக அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

وَزَكَرِيَّا إِذْ نَادَىٰ رَبَّهُ رَبِّ لَا تَذَرْنِي فَرْدًا

அண்ணாருக்கு வயது முதிர்ந்த பிறகும் குழந்தைக்காக இறைவனிடம் வேண்டி நின்றார்கள். நபி யஹ்யா (அலை) அவர்களை அல்லாஹ் வாரிசாகத் தந்தான்.

இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் இந்த வசனத்தில் விளக்கம் கூறும் போது ஜகரிய்யா (அலை) அவர்களின் மனைவி குழந்தை பெற்றுக் கொள்ள தகுதியற்றவராகவே இருந்தார். ஜகரிய்யா (அலை) அவர்களின் அயாராத பிரார்த்தனையாலேயே குழந்தை பெற்றெடுக்கும் மகத்தான பாக்கியத்தை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான் என கூறுகிறார்கள்.

**- இப்னு கஸீர்**

நபி ஜகரிய்யா (அலை) அவர்களுக்கு வயது முதிர்ந்து விட்டாலும் வல்ல அல்லாஹ்விடம் கேட்டுப் பெறும் தன்னார்வமே குழந்தை

பாக்கியம் அவர்களுக்கு கிடைக்க காரணமாய் அமைந்தது என்பதே இவ்விடத்தில் நாம் விளங்க வேண்டியது.

**நன்மையான விஷயங்களில் போட்டி**

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

فَاسْتَبِقُوا الْخَيْرَاتِ

நன்மைகளின் பால் நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்.

**- அல்குர்ஆன் 2 : 148**

நன்மைகள் செய்யக்கூடிய செயல்களில் தன்னார்வத்தோடு முந்திக் கொண்டு செயல்படக்கூடியவர்களாக இருக்கும் படி அல்லாஹ் கட்டளையிடுகின்றான். மற்றொரு வசனத்தில்...

وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

இன்னும் எவனொருவன் உபரியான நன்மையை (தன்னார்வத்தோடு) செய்கிறானோ (அவனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுகிறவனாகவும், (அவனுடைய செயல்களை) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

**- அல்குர்ஆன் 2 : 158**

இந்த வசனத்தில் ஆர்வமாக செயல்படுவதற்கு تطـــــــوع என்ற வார்த்தையை இறைவன் பயன்படுத்துகிறான். இந்த வார்த்தைக்கு தஃப்ஸீர் இமாம்கள் கூறுகையில் தானாக போட்டி போட்டு செய்யக்கூடியதற்கு சொல்லப்படும் வார்த்தை என்று கூறுகின்றார்கள். இன்று நாம் பல செயல்களில் போட்டி போட்டு செயல்படுகின்றோம். பணம் சம்பாதிப்பதில், சொத்துக்களை வாங்கி குவிப்பதில், வீடு கட்டுவதில், வாகனம் வாங்குவதில், வியாபாரம் செய்வதில், தன் கண்ணியத்தை விரிவுபடுத்துவதில் என்று பலவற்றிலும் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நன்மைகளை செய்யக்கூடிய விஷயத்தில் நம்மிடம் போட்டி இருக்கின்றதா? என்று பார்த்தால் இல்லை என்பதே பதிலாக கிடைக்கும். இனி நம்மிடம்

நன்மையான விஷயங்களில் போட்டி மனப்பான்மை வர வேண்டும். போட்டி என்பது தன்னார்வம் இருந்தால் மட்டுமே வரும். ஆர்வமும், ஆசையும் இல்லாமல் போட்டி போட முடியாது.

அதனால்தான் ஒரு நற்காரியத்திற்காக நீங்கள் ஆசைப்பட்டால் அதற்கும் நற்கூலி உண்டு என ஆர்வமூட்டினார்கள் நபியவர்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ; உங்களில் ஒருவர் ஆசைப்பட்டால் அவர் என்ன ஆசைப்படுகிறார் என்பதை சிந்தனை செய்து கொள்ளட்டும். ஏனெனில் அவரது ஆசைக்கும் கூலி எழுதப்படும்.

இந்த அழகிய நபிமொழி கூறும் கருத்திற்கிணங்க நாம் எதன் மீது ஆர்வம் கொள்கிறோம்? என்பதை மீளாய்வு செய்து நல்வழிகளில் தன்னார்வத்தை அதிகப்படுத்த வேண்டும்.

**எவைகளில் தன்னார்வம் வேண்டும்?**

**1. வணக்க வழிபாடுகளில் தன்னார்வம்.**

திருமறைக் குர்ஆனின் வசனம் சொல்வது போன்று நாம் வணங்குவதற்காகவே படைக்கப்பட்டவர்கள். ஆனால் வணக்க வழிபாடுகளில் சுறுசுறுப்பு – சோம்பேறித்தனம் இவைகளுக்கு மத்தியில் தடுமாறிக் கொண்டேயிருக்கின்றோம். சுறுசுறுப்பு அதிகமாகும் போது அமல்கள் அதிகமாவதும், சுறுசுறுப்பு குறையும் போது அமல்கள் குறைவதும்தான் நம்மிடையே உள்ள வழமை. இபாதத் என்ற வார்த்தைக்கு வணக்க வழிபாடு என்பதை தவிர்த்து பல்வேறு சிறப்பான விளக்கங்கள் சொல்லப்படுவதுண்டு.

அல்லாஹ்விற்கு பயந்து நடப்பதில் சிறப்பான நிலையை வெளிப்படுத்துவது.

மனோ இச்சைக்கு அடிபணியாமலிருக்க அதிக முயற்சி எடுப்பது.

அல்லாஹ்வின் திருப்தி ஒன்றையே தனது எல்லா செயல்களிலும் எதிர்பார்ப்பது.

தனது ஒவ்வொரு செயலையும் இறைவனுக்காகவே மேற்கொள்வது.

இந்த கருத்துக்கள் அனைத்தும் நமது வாழ்வின் எல்லா செயல்பாடுகளிலும் இஸ்லாமிய வழிகாட்டுதல்கள் நிலைத்திருக்க

வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன. அதனால்தான் வணக்க வழிபாடுகள் குறித்து திருமறை குர்ஆன் விரிவாகப் பேசுகின்றது. வணக்க வழிபாடுகளில் கவனமற்று இருப்பவர்களுக்கு நெருக்கடியான வாழ்வையும், அதில் நிறைவாக செயல்படுபவர்களுக்கு சுபிட்சமான வாழ்வையும் அருள்மறை வாக்களிக்கின்றது. திருமறையின் பின்வரும் வசனத்தை நன்கு கவனியுங்கள்.

وَمَنْ أَعْرَضَ عَنْ ذِكْرِي فَإِنَّ لَهُ مَعِيشَةً ضَنْكًا وَنَحْشُرُهُ يَوْمَ الْقِيَامَةِ أَعْمَىٰ

மேலும் எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை இருக்கிறது. (அன்றியும்) இறுதித் தீர்ப்பு நாளில் அவனைக் குருடனாகவும் நாம் எழுப்புவோம்.

**- அல்குர்ஆன் 20 : 124**

மேற்கூறிய வசனத்தில் குறிப்பிட்டுள்ள நெருக்கடியான வாழ்வு என்பதற்கு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை கூறுகின்றனர்.

அல்லாஹ்வை வழிப்படாத ஒருவன் நெருக்கடியான மனோ நிலைக்கு ஆளாவான்.

மரணத்திற்கு பிறகுள்ள கப்ருடைய வாழ்வினை அல்லாஹ் நெருக்கடிக்குரியதாக ஆக்கிவிடுவான்.

கவலைகளும், கஷ்டங்களும் அதிகமாகும்.

உறுதியான மனப்பான்மையும், நேர்வழியும் இல்லாமல் போகும்.

இவ்வசனத்திற்கு இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் விளக்கம் கூறுகையில் இறைவணக்கங்கள் இல்லாமல் வாழும் ஒரு அடியான் தான் நாடியதைச் சாப்பிடுமளவிற்கும், தான் நாடியதை உடுத்துமளவிற்கும், தான் நாடிய விதத்தில் தனது இருப்பிடங்களை அமைத்துக் கொள்ளுமளவிற்கும் வசதிகள் இருந்தாலும் மனதில் அமைதியற்ற நிலையும், விசாலமில்லாத உள்ளத்தையும்தான் அவன்

பெற்றிருப்பான் என்கிறார்கள்.

**வழிப்பட்டவருக்கு வளமான வாழ்வு**

அல்லாஹ்வை வழிப்படாதவருக்கு நெருக்கடிகள் வருமென்றால் முற்றிலும் தன்னை இறைபாதையில் வடிவமைத்துக் கொண்டவனுக்கு செழிப்பான வாழ்வை அருள்மறைக் குர்ஆன் வாக்களிக்கிறது.

مَنْ عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ أَوْ أُنْثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُ حَيَاةً طَيِّبَةً ۖ
وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُمْ بِأَحْسَنِ مَا كَانُوا يَعْمَلُونَ

ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கைக் கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். அன்றி (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததை விட மிக்க அழகான கூலியையே நாம் வழங்குவோம்.

**- அல்குர்ஆன் 16 : 97**

மற்றொரு வசனத்தில் இறைவனை நம்பிக்கைக் கொண்டு முற்றிலும் அல்லாஹ்வை அஞ்சி நடந்தவருக்கு வானம், பூமியின் அனைத்து வளங்களையும் திறந்து கொடுக்கப்படுமென வாக்களிக்கின்றான்.

وَلَوْ أَنَّ أَهْلَ الْقُرَىٰ آمَنُوا وَاتَّقَوْا لَفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكَاتٍ مِّنَ السَّمَاءِ
وَالْأَرْضِ

அவ்வூர்களில் இருந்தவர்கள் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்விற்கு) பயந்து நடந்திருந்தால், அவர்களுக்காக வானத்திலும், பூமியிலும் உள்ள அருட்கொடைகளின் வாசல்களை நாம் திறந்துவிட்டிருப்போம்.

**- அல்குர்ஆன் 7 : 96**

**இறைவணக்கத்தில் இறுதித்தூதர் (ஸல்)**

**பத்ரு நிகழ்வு**

வணக்க வழிபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தினாலேயே தனது அடிமைத்தனத்தை பரிபூரணமாக வெளிப்படுத்தி தன்னைத்தானே வருத்திக் கொண்டு வணக்கத்தில் ஈடுபட்டார்கள் நபி (ஸல்) அவர்கள். இதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. நபி (ஸல்) அவர்கள் இறைவழிபாட்டின் மூலம் எந்தளவிற்கு அல்லாஹ்வின் உதவியைப் பெற்றார்கள் என்பதற்கு பத்ரு களம் மிகப்பெரிய முன்னுதாரணமாகும். மிகக் கடினமான அந்நேரத்தில் நபித்தோழர்கள் அனைவரும் உறக்கத்தில் இருக்க நபி (ஸல்) அவர்கள் மட்டும் ஒரு மரத்தின் கீழே தொழுது கொண்டும், அழுது கொண்டும் இருந்தார்கள்.

**- ரஹீக்**

இது போன்றுள்ள நபியவர்களின் முன்னுதாரணங்களை நாம் நம் வாழ்க்கையில் தவறாமல் எடுத்து நடக்க கடமைப்பட்டுள்ளோம். குறிப்பாக சமூகத்தின் பொறுப்பாளர்கள் இதை அவசியம் எடுத்து நடக்க வேண்டும். காரணம் இறை உதவிகளைப் பெறுவதில் அவர்கள் முன்னணியில் இருக்க வேண்டும். அதற்கு வணக்க வழிபாடுகள் இன்றியமையாததாகும்.

**2. சமூகப் பணிகளில் தன்னார்வம்**

பிற மக்களுக்கு உதவியாக இருத்தல் என்பது தனி மனித பண்புகளை சீராக்குவதுடன் ஒரு சமூகம் பிணைப்புடன் வாழவும் வழிவகுக்கிறது. அதனால்தான் நபியவர்கள் குறிப்பிட்டார்கள் ;

احب الناس الى الله انفعهم للناس

மனிதர்களில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானவர் அவர்களுக்கு அதிகம் பிரயோஜனம் அளிப்பவரே!

பிற நபர்களுக்கு உதவியாக இருப்பதை உன்னதமிக்க அமலாகவும் அறிவுறுத்தினார்கள் நபி (ஸல்) அவர்கள். ஒரு ஹதீஸில்...

முஃமினை மகிழ்ச்சிப்படுத்துவது

அவனது கஷ்டத்தைப் போக்குவது

அவனது கடனை நிறைவேற்றுவது

அவனது பசியைப் போக்குவது

இவையனைத்தும் அல்லாஹ்விற்கு மிக விருப்பமான அமலாக குறிப்பிட்டார்கள்.

**- இப்னு அபித்துன்யா**

பிறருக்கு உதவியாக இருத்தல் எனும் பண்பு, அது உடல் பொருள் எதுவாக ஆனாலும் அது அவனை சீதேவித்தனமான நிலைக்கு உயர்த்துவதாக அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் இஃதிகாப் இருந்த சமயத்தில் ஒருவர் உதவி நாடி வந்தார். அவரது தேவையை நிறைவேற்றுவதற்காக இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் பள்ளியிலிருந்து வெளியேற முற்பட்டார்கள். தோழர்கள் இஃதிகாப் இருப்பதை அவருக்கு ஞாபகமூட்டினர். அப்போது இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறினார்கள்;

நபி (ஸல்) அவர்களின் கப்ரை காட்டி இந்த கப்ரில் இருப்பவர் கூறினார். தன் சகோதரனுடைய தேவையை நிறைவேற்றுவதற்காக வெளியில் செல்வது மஸ்ஜிதுன் நபவியில் ஒரு மாதம் இஃதிகாப் இருப்பதை விட சிறந்ததாகும்.

மக்களுக்காக பலன் தரும் விதத்திலான சின்னஞ்சிறு செயல்களும் கூட தானதர்மங்களுடன் சம்பந்தப்பட்டவையாக நபியவர்கள் உபதேசித்தார்கள்.

உன் சகோதரனை பார்த்து புன் சிரிப்பு சிரிப்பதும் தர்மமாகும்.

நன்மையை ஏவி தீமையை தடுப்பதும் தர்மமாகும்.

வழி தவறிப்போன ஒருவருக்கு வழிகாட்டுவதும் தர்மமாகும்.

கண் பார்வையற்றோருக்கு உதவுவதும் தர்மமாகும்.

கல், முள், எலும்பு போன்றவற்றை பாதையிலிருந்து அகற்றுவதும் தர்மமாகும்.

உன்னுடைய வாலியிலிருந்து உன் சகோதரனுடைய வாலியை தண்ணீரால் நிரப்புவதும் தர்மமாகும்.

**- திர்மிதீ**

இன்றைக்கு சமூக நலப்பணிகளின் மீதுள்ள ஆர்வம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கிறது. மட்டுமல்ல ; மக்கள் பணிகளில் ஈடுபடும் போது நிறைய கஷ்டங்களை நாம் அடைய நேரிடும் என்கின்ற எண்ணம் பரவலாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த எண்ணம் ஒரு சமூகத்தின் பரஸ்பரமான உறவுகளுக்கு மிகப்பெரும் நஷ்டத்தையே உருவாக்கும்.

ஒரு அடியான் தன் சகோரனுக்கு உதவியாக இருக்கும் காலமெல்லாம் அவனுக்கு அல்லாஹ்வும் உதவியாக இருக்கிறான் என்ற நபிமொழி இங்கே நினைவு கூறத்தக்கதாகும்.

மக்களுக்காக நாம் செய்யும் நற்காரியங்கள் மரணத்திற்கு பிறகும் நமக்கான நன்மையைச் சேர்க்கும் ஆற்றலுடையவை.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;

ஏழு காரியங்கள் ஒருவன் மரணித்து கப்ருக்குச் சென்று விட்டாலும் அவனுக்கு நன்மை தருகின்றன.

1. பிறருக்கு கல்வி கற்றுக் கொடுப்பது.

2. ஆற்றை ஓடச் செய்வது.

3. கிணற்றை தோண்டுவது.

4. பேரீத்த மரம் நடுவது.

5. பள்ளிவாசல் கட்டுவது.

6. குர்ஆனை வக்ஃப் செய்வது.

7. மரணத்திற்கு பிறகு தனக்கான பாவமன்னிப்பு தேடும் ஒரு குழந்தையை விட்டுச் செல்வது.

**- இப்னு மாஜா**

மக்களுக்கு நலன்தரக்கூடிய பணிகளை நபி (ஸல்) அவர்கள் எந்தளவிற்கு வலியுறுத்தினார்கள் என்றால், ஒரு முறை இவ்வாறு கூறினார்கள் ; நீ கையில் ஒரு மரக்கன்றை வைத்திருக்கின்றாய். கியாம நாள் அடுத்து வந்து விடும் என்று தெரிந்தாலும் அதை நட்டு விட்டு செல் என்றார்கள். உலகமே அழிந்து விடும் என்றாலும் உன்னால் முடிந்த நற்செயலை செய் என்பதாகவே வலியுறுத்தினார்கள்.

**3. ஷஹாதத்தை அடைவதில் தன்னார்வம்**

நமது உயிர்களையும், பொருட்களையும் அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணித்தால் அதனால் கிடைக்கும் உன்னதமிக்க ஸ்தானத்தையும், சிறப்புக்களையும், அது சார்ந்துள்ள வரலாறுகளையும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

உத்தமத் திருத்தூதர் (ஸல்) அவர்களே தன்னுயிரை அர்ப்பணிக்க அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டு, மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு, மீண்டும் கொல்லப்பட்டு, மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு, மீண்டும் கொல்லப்பட்டு, மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டு மீண்டும் கொல்லப்படுவதை நான் விரும்புகிறேன்.

**- புகாரீ**

இந்த ஷஹாதத் எந்தளவிற்கு அந்தஸ்திற்குரியது என்பதையே மேற்கூறிய நபியவர்களின் வார்த்தைகள் உணர்த்துகின்றன. அல்லாஹ்வின் பாதையில் போரிடுதல், அதன் மூலம் ஷஹாதத்தை அடைவதும் சிறப்பானது மட்டுமல்ல அது இஸ்லாத்தின் அடிப்படையும் கூட.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;

இஸ்லாத்தின் தலையாய கடமை தொழுகை, அந்த இஸ்லாத்தில் மிக உயர்ந்தது ஜிஹாது.

**- திர்மிதீ**

மேலும் ஒரு நபிமொழியில் அல்லாஹ்வின் பாதையில் சிறிதளவு நேரம் செலவழிப்பதும் இந்த உலகமும், அதிலுள்ளவற்றையும் விட சிறந்ததாகும்.

**- புகாரீ**

அல்லாஹ்வின் பாதையில் செலவழிக்கப்படும் அற்ப நேரம் கூட உலகமும் அதிலுள்ளவற்றையும் விட சிறப்பானது எனும் போது அதனை எவ்வளவு தூரம் ஆசை கொள்ள வேண்டும். நபி (ஸல்) அவர்களின்

மற்றொரு பொன்மொழியைப் பாருங்கள்.

நபியவர்கள் கூறினார்கள் ; அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சுவனம் வாளின் நிழலின் கீழேதான் உள்ளது.

**- புகாரீ**

அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதும், அதிலேயே தன்னுயிரை அர்ப்பணிப்பதும் மிகச் சிறப்பான செயல் என்ற காரணத்தினால்தான் இச்சிறப்புக்களை அடைந்து கொள்ள நபித்தோழர்கள் மிகவும் ஆசைப்பட்டார்கள். அதற்கான ஒரு வரலாற்றுச் சான்று இதோ.

அம்ரு இப்னு ஜமூஹ் (ரளி) அவர்கள், இவர் தனது செல்வத்தை இறைவழியில் செலவு செய்வதில் அதீத ஆர்வம் காட்டியதோடு தனது உயிரையும் சத்திய இஸ்லாத்திற்காக தியாகம் செய்ய பேரார்வம் கொண்டார். அதற்கான வாய்ப்பு பத்ர் யுத்தம் மூலம் வந்தது. எனினும் இவரது ஒரு கால் சரியாக இயங்காமல் இருந்தது. அத்துடன் இவரது வயோதிகத்தையும் உடல் குறைபாட்டையும் காரணம் காட்டி இவரது புதல்வர்கள் இவரைத் தடுத்துவிட்டு அவர்கள் களம் சென்றனர்.

இவ்வாறே உஹது யுத்தத்திற்குத் தயாரான போதும் தந்தைக்கும், புதல்வர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. புதல்வர்கள் உங்களுக்கு வயது முதிர்ந்து விட்டது. அத்துடன் உங்களுக்குச் சரியாக நடக்கவும் முடியாது என்று கூறினார். இது கேட்டு சினமுற்ற முதியவர் அம்ர் இப்னுல் ஜமூஹ் (ரளி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் சென்று அல்லாஹ்வின் தூதரே! நான் நொண்டி என்ற காரணத்தைக் கூறி என் புதல்வர்கள் என்னை ஷஹாதத் எனும் நற்பாக்கியத்தை விட்டும் தடுத்து விடப் பார்க்கின்றனர். இப்படித்தான் பத்ரிலும் இவர்கள் நடந்து கொண்டனர். நான் எனது இந்த நொண்டிக் காலுடன் சுவனத்தில் உலாவ விரும்புகின்றேன் என்று கூறினார்கள். இது கேட்ட நபி (ஸல்) அவர்கள் இவரது புதல்வர்களைப் பார்த்து அவரை அவர் வழியில் விட்டு விடுங்கள். அல்லாஹ் அவரது மனவிருப்பம் போல் அவருக்கு ஷஹாதத்தை வழங்கலாம் என்று தெரிவித்தார்கள். இது கேட்ட புதல்வர்களும்

தந்தைக்கு இட்ட தடையை தகர்த்தி அவருக்கு உதவ முன்வந்தனர். முழுக் குடும்பமும் உஹுது களத்தை நோக்கிச் சென்றது.

சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாது என்பார்கள். மரணத்தை விரும்புகின்றவனை விட பெரிய வீரன் எவனும் இருக்க முடியாது. அவனை யாரும் எதுவும் செய்து விடவும் முடியாது. இதனை இவரது இறுதிப் பயணம் உறுதி செய்தது. அவர் புறப்படும் முன் கஃபாவை முன்னோக்கி யா அல்லாஹ்! எனக்கு வீர மரணத்தை நல்கிடு. என்னை அஞ்சிப் பின்வாங்கியவனாக என் குடும்பத்தின் பக்கம் மீள அனுப்பி விடாதே என்று பிரார்த்தித்து விட்டே புறப்பட்டார்கள். அவரது துஆவும் அங்கீகரிக்கப்பட்டது.

நபியவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற வதந்தியுடன் முஸ்லிம் படை சின்னாபின்னமாகிப் புறமுதுகு காட்டி ஓடிய போது இவர் ஒற்றைக் காலால் பாய்ந்து பாய்ந்து எதிரிகளுடன் போராடினார். இவருக்கு துணையாக இவரது மகன் ஹல்லாத் (ரளி) அவர்களும் போராடினார்கள். இவ்விருவரும் நபி (ஸல்) அவர்களை நோக்கி வந்த எதிரிகளைத் தடுப்பதில் தம் உயிரைத் தியாகம் செய்தனர். தந்தையும், மகனும் சில நொடிப் பொழுது இடைவெளியில் வீரமரணம் எய்தினர்.

### தன்னார்வத்தின் தடைகற்கள்

### 1. சோம்பேறித்தனம்

சோம்பேறிகளால் தொழுகையைக் கூட ஒழுங்காக நிறைவேற்ற முடியாது என்பதாகவே அல்லாஹ் குறிப்பிடுகின்றான். கடமையான தொழுகையிலேயே இந்நிலை என்றால் மற்ற அமல்களைப் பற்றி கூறத் தேவையில்லை. அல்லாஹ் அவர்களின் இழிநிலையைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்.

إِنَّ الْمُنَافِقِينَ يُخَادِعُونَ اللَّهَ وَهُوَ خَادِعُهُمْ وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا
كُسَالَىٰ يُرَاءُونَ النَّاسَ وَلَا يَذْكُرُونَ اللَّهَ إِلَّا قَلِيلًا ، مُّذَبْذَبِينَ بَيْنَ ذَٰلِكَ

لَآ إِلَىٰ هَٰٓؤُلَآءِ وَلَآ إِلَىٰ هَٰٓؤُلَآءِ ۚ وَمَن يُضْلِلِ ٱللَّهُ فَلَن تَجِدَ لَهُۥ سَبِيلًا

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான். அவர்கள் தொழுகைக்கு தயாராகும் பொழுது சோம்பலுடையவராகவே நிற்கிறார்கள். மனிதர்களுக்கு காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்) மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.

இந்த முனாஃபிக்குகள் முஃமின்களின் பக்கமுமில்லை. காஃபிர்களின் பக்கமுமில்லை. இரு பிரிவினரிடையே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் எவரை வழி தவறச் செய்து விட்டானோ அவருக்கு (நபியே) யாதொரு வழியையும் நீர் காணமாட்டீர்.

**- அல்குர்ஆன் 4 : 142, 143**

## 2. இலக்கில்லாத வாழ்வு

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;

எவருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டிடத் தீர்மானித்து விட்டானோ அவருடைய நெஞ்சை இஸ்லாத்திற்காக திறந்து விடுகின்றான் எனும் வசனத்தை ஓதிவிட்டு, ஒளி உள்ளத்தில் புகும் போது நெஞ்சம் திறந்து கொள்கிறது. மக்கள் கேட்டார்கள் ; அல்லாஹ்வின் தூதரே! நெஞ்சம் திறந்து கொண்டதைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்ற புலன்களுக்குத் தெரியக்கூடிய அடையாளம் ஏதும் உண்டா? அண்ணலார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். மனிதனின் உள்ளம் இந்த உலகைக் குறித்து அலுப்புற்றுவிடும். நிலையான மறுமை வீட்டை ஆசைப்படத் தொடங்கும். மரணம் வருவதற்கு முன்பே அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு விடும்.

**- மிஷ்காத்**

### *இலக்கில்லாதவர்களின் நிலை*

ஒருவர் காலையில் எந்த வேலையும் இல்லாத ஒருவர் வீட்டிலிருந்து கிளம்புகிறார் என்றால் நேராக டீ கடை செல்வார். நண்பனின் கடையில் நிற்பார். அங்கும் இங்கும் நடப்பார். இதே

ஒருவருக்கு இன்ன வேலை இருக்கிறது என்றால் வீட்டிலிருந்து கிளம்பும் போதே நேராக அந்த இடத்திற்குத்தான் செல்வார். இலக்கு இல்லையென்றால் ஆர்வமும் இருக்காது.

### 3. உலக வாழ்வு நிரந்தரம் எனும் சிந்தனை

நமக்கு நிறைய நேரம் இருக்கின்றது என்ற சிந்தனை வேலைகளில் ஆர்வத்தைக் குறைக்கும். நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள் ; காலையை அடைந்தால் மாலையை எதிர்பார்க்காதே. மாலையை அடைந்தால் காலையை எதிர்பார்க்காதே.

அல்லாஹ் கூறுகின்றான் ;

இன்னும் அ(ந் நரகத்) தில் அவர்கள், எங்கள் இறைவா! நீ எங்களை (இதை விட்டு) வெளியேற்றுவாயாக. நாங்கள் வழக்கமாகச் செய்து கொண்டிருந்த (தீய) வற்றை விட்டும் ஸாலிஹான அமல்களைச் செய்வோம் என்று கூறி கதறுவார்கள். (அதற்கு அல்லாஹ்) சிந்தித்துப் பார்க்கக்கூடியவன் அதில் சிந்திக்கும் பொருட்டு, நாம் உங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவில்லையா? உங்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவரும் வந்திருந்தார். ஆகவே நீங்கள் (செய்த அநியாயத்தின் பயனை) சுவையுங்கள். ஏனென்றால் அநியாக்காரர்களுக்கு உதவியாளர் எவருமில்லை (என்று கூறுவான்.)

**- அல்குர்ஆன் 35 : 37**

*முடிவுரை*

தன்னார்வத்தோடு செயல்படும் போது இஹ்லாஸாக அல்லாஹ்விற்கு மட்டுமே அவனிடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்து செயல்பட வேண்டும். நாம் செய்யும் செயல்களுக்கு இவ்வுலகத்தில் எவ்வித சிறு பிரதிபலனையும் எதிர்பார்க்கக்கூடாது. அல்லாஹ் இவ்வாறுதான் கூறுகின்றான் ;

அவர்கள்தாம் (தங்கள்) நேர்ச்சைகளை நிறைவேற்றி வந்தவர்கள். ஒரு நாளை அவர்கள் அஞ்சுவார்கள். அதன் தீங்கு

(எங்கும்) பரவியிருக்கும்.

மேலும் அ (வ்விறை) வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைபட்டவருக்கும் உணவளிப்பார்கள்.

உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் முகத்திற்காக (அவன் திருப்பொருத்தத்திற்காக) உங்களிடமிருந்து பிரதிபலனையோ, நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை (என்று அவர்கள் கூறுவார்கள்.)

– அல்குர்ஆன் 76 : 7-9

தன்னார்வத்தின் தடைக்கற்களை தகர்த்து, நல்அமல்கள் செய்வதில் ஆர்வத்தோடு செயல்பட்டு, அல்லாஹ்விடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்து இம்மையிலும், மறுமையிலும் வெற்றியடைய அல்லாஹ் அருள்புரிவானாக. ஆமீன்.